சுருக்கம்.

தணிக்கைத் தடை - நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் - தணிக்கைத் தடை நிவர்த்திக்காக இறப்பு - ஓய்வு பணிக்கொடையை 25% நிறுத்தி வைத்து ஆணை வெளியிடப்பட்டது - இறப்பு - ஓய்வு பணிக்கொடையினை முழுவதுமாக வழங்க ஆணையிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப.1)துறை.

அரசு ஆணை(நிலை)எண்.16.

நாள்:18.1.1999

படிக்கப்பட்டது.

1.20.2.1989 நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறை அரசாணை(நிலை)எண்.123.
2.1.7.198 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, அரசாணை (நிலை)எண்.394.
3.27.1.1994 நாளிட்ட மாநில தணை கணக்காய்வுத் தலைவர்(ஓய்வூதியம்)அவர்களின் கடித எண்.ப்பிஆர்/ஏஜி(ஏ&இ)ப்பிஎம்/111/3-4/93-94/605.
4.18.10.1995 நாளிட்ட உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநரின் கடித எண். 114/52581/95.
5.17.9.1996 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.36392/96/பி2.

• • •

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களுக்குண்டான இறப்பு-ஓய்வு பணிக்கொடையில் தணிக்கை தடை நிவர்த்திக்காக 25%-த்தினை நிறுத்தி வைத்துக்கொண்டு, மீதி, 75%-த்தை வழங்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. மாநில தணை கணக்காய்வுத் தலைவர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஓய்வு பெறும் நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரின் பணிக்கொடை ஓய்வூதியத்தில் 25% தொகையினை தணிக்கைத்தடை நிவர்த்திக்காக நிறுத்தி வைப்பது ஓய்வூதிய விதிகளுக்கு முரணானது என்றும், ஓய்வு பெறும் அலுவலர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகைக்காக இறப்பு-ஓய்வு பணிக்கொடையில் 10% அல்லது ரூ.1000/-இதில் எது குறைவோ, அத்தொகையினைத்தான் ஓய்வூதிய விதிகளின்படி நிறுத்தி வைக்க இயலும் என்று தெரிவித்துள்ளார். தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்படும் இழப்புகள் அரசுக்கு செலுத்த வேண்டிய பாக்கி இல்லையென்றும், நகராட்சி ஆணையர், பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரின், மீதான பகரப் பொறுப்பே(vicarious liability) என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தணிக்கைத் தடை நிவர்த்தி சான்றிதழ்கள் உடனுக்குடன் வழங்கப்படாததால் நிறுத்தி வைக்கப்படும் 25% இறப்பு-ஓய்வு பணிக்கொடை அதிக அளவில் சேர்ந்துவிடுகிறது. என்றும் தெரிவித்துள்ளார். எனவே ஓய்வுபெறும் நகராட்சி ஆணையர், பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு முழு இறப்பு-ஓய்வு பணிக்கொடையினையும் மற்ற ஓய்வூதிய பயன்களுடன் சேர்த்து வழங்க ஆணையிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாநில தணைக் கணக்காய்வுத் தலைவரின் கோரிக்கை சம்பந்தமாக, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்து கோரப்பட்டது. பணிக்காலத்தில் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட பணியிடங்களில் நகராட்சி ஆணையர்கள் பணியாற்ற நேரிடுகிறதென்றும், அவர்களால் மூன்றாண்டுகள் தொடர்ந்து ஓரிடத்தில் பணியாற்றி தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய இயலவில்லை என்று நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் நகராட்சி அலுவலகங்களில் முந்தைய காலங்களில் ஏற்பட்டுள்ள தணிக்கைத் தடைகளுக்கு, பின்பு பணியாற்றும் நகராட்சி ஆணையர்கள் அதனை முடிவு செய்வதற்கு குறைந்த அளவே அக்கறை செலுத்துகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். தணிக்கைத் துறையினர் எந்த ஒரு அதிகாரியையோ, அலுவலரையோ இழப்புக்கு காரணம் எனக் குறிப்பிடுவதில்லை. பொதுவாக நகராட்சி ஆணையர்களையே தணிக்கைத் தடைக்கு பொறுப்பாக்குகின்றனர். மேலும் ஒவ்வொரு தணிக்கைத் பத்தியும் அதிகாரிகள் மற்றும் அலுவலரின் கூட்டு முயற்சியாலேயே அதன்மீது தீர்வுகாண இயலும். அவ்வாறு தீர்வு காண இயலாத பட்சத்தில் ஓய்வுபெறும் நகராட்சி ஆணையர்களே பொறுப்பாக்கப்படுகின்றனர். ஓரிடத்திலிருந்து மாறுதல் செய்யப்பட்ட பின்பு அவ்வலுவலகத்திலுள்ள தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு மாறுதல் செய்யப்பட்ட நகராட்சி ஆணையாளர்களுக்கு எந்தவித பிடிப்பும் அவ்வலுவலகத்தில் இல்லையென்றும், வேண்டுமென்றோ அல்லது கவனக்குறைவாலோ அல்லது உள்நோக்குடனோ அரசுக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டு அதை தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டால் சம்பந்தப்பட்ட அலுவலரின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்று தெரிவித்து மாநில தணைக் கணக்குத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளபடி ஓய்வுபெறும் அலுவலர்களுக்கு இறப்பு-ஓய்வு பணிக்கொடைத் தொகையை முழுவதும் வழங்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேற்படி மாநில துறைக் கலைக்குத் தலைவரின் கோரிக்கைப் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :-

1. ஒழுங்கு நடவடிக்கை இல்லாத அலுவலர்களுக்கான இறப்பு-ஓய்வு பணிக்கொடையினை முழுவதுமாக வழங்க வேண்டும்.

2. தணிக்கை மற்றும் பிற வகையில் தணிக்கைத் துறையினர் கண்டறியும் கடுமையான முறைகேடுகளுக்காக சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கவேண்டும்.

3. உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநர் மேற்கொள்ளும் தணிக்கையின் தன்மையை ஆராயவும், மேற்கொள்ளப்படும் தணிக்கைத் துறைக்கு மிகவும் அர்த்தமுடையதாகவும் பயனுடையதாகவும் இருக்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் மற்றும் நிதித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

4. நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகள் நிர்வாக அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஓய்வு பெறும் பொழுது அவர்களின் மீதான தணிக்கைத் தடை நிவர்த்திக்காக 25% இறப்பு-ஓய்வு பணிக்கொடையை நிறுத்தி வைப்பது, தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளுக்கு முரணாக உள்ளதால் மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்ட முடிவுகளுக்கு நிதித்துறையும் ஒப்புதல் அளித்துள்ளது.

5. எனவே மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில் நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் ஓய்வுபெறும்பொழுது தணிக்கைத் தடை நிவர்த்திக்காக தற்போது நிறுத்தி வைக்கப்படும் 25% இறப்பு-ஓய்வு பணிக்கொடையினை நிறுத்தம் செய்யாமல் இறப்பு-ஓய்வு பணிக்கொடை முழுவதையுமே அவர்கள் ஓய்வுபெறும்பொழுது வழங்கலாமென முடிவுசெய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும் தணிக்கை மற்றும் பிற வகையில் தணிக்கைத் துறையினர் கண்டறியும் கடுமையான முறைகேடுகளுக்கான சம்பந்தப்பட்ட அலுவலரின் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளின்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் மேற்கொள்ளும் தணிக்கையின் தன்மையை ஆராயவும், அத்தணிக்கை துறைக்கு மிகவும் அர்த்தமுடையதாகவும், பயனுடையதாகவும் இருக்கும் பொருட்டு, பேரூராட்சிகள் இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் மற்றும் நிதித்துறை, நகராட்சி நிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கு துறை பிரதிநிதிகள் இx அடங்கிய ஒரு சிறு குழு ஒன்றை அமைப்பதற்கு வரையறைகளுடன் (terms of reference கூடிய செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு உடனடியாக அனுப்புமாறும் பேரூராட்சிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வரசாணை 11.1.1999 நாளிட்ட நிதித்துறையின் அ.சா.கு.எண்.836/88/88/99-ல் அளிக்கப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

/ஒம்/எஸ்.மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.

/உண்மை நகல்/

நகராட்சி நிர்வாக ஆணையர்
அலுவலகம், சென்னை-5.

ந.க.எண்.14236/98/பி2 நாள் 3.2.99.

நகல் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

ஒம்/ எஸ். ஜெயராமன்,
கூடுதல் இயக்குநர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட ஒ.பெ. நகராட்சி ஆணையர்கள்/
" நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்/
உதவிஆணையர்கள்/மாநகராட்சி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/ கண்காணிப்பாளர்.